

செ.வெ.எண்: 526/2016 நாள்: 12.08.2016

# பத்திரிகைச் செய்தி

## கன்னியாகுமரி(இ)நாகர்கோவில் தொழிலாளர் அலுவலர்(சமூகபாதுகாப்புத் திட்டம்)அலுவலகத்தில் வெளிமாநில தொழிலாளர்களுக்கு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியஅட்டைவழங்கும் நிகழ்ச்சி

தமிழ்நாடு தொழிலாளர் நலத்துறையிலுள்ள 18 வாரியங்களில் ஒன்றான கட்டுமான தொழிலாளர்கள் நலனுக்காக கட்டுமான தொழிலாளர்கள் நலவாரியம் செயல்பட்டு வருகிறது. கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வெளி மாநில தொழிலாளர்கள், பதிவு செய்யாமலிருந்து பணியிடத்தில் விபத்து ஏற்பட்டு இறக்க நேரிட்டால் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களால் வாரியத்தின் மூலம் வழங்கப்படும் நிதிஉதவித்தொகையான ரூ.5,02,000/-ஐ பெற வழிவகை உள்ளதால் தனிகவனம் செலுத்திவெளிமாநிலகட்டுமானப் பணியாளர்களைவாரியத்தில் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சென்னை, தொழிலாளர் ஆணையர் அவர்களால் வழங்கப்பட்ட உத்தரவுக்கிணங்க, மதுரை தொழிலாளர் இணைஆணையர் மற்றும் திருநெல்வேலி, தொழிலாளர் துணை ஆணையர் அவர்களின் அறிவுரைகளுக்கிணங்கவும் வெளி மாநிலங்களான பீகார், ஒரிசா மற்றும் ஆந்திர பிரதேச தொழிலாளர்கள் இடம் பெயர்ந்து கன்னியாகுமரி மாவட்டத்தில் கே.பி.ரோடு,நாகர்கோவில் என்னும் முகவரியில் போத்தீஸ் நிறுவனத்திற்காககட்டப்படும் கட்டிடத்தில் கட்டுமானப் பணிகள் மேற்கொண்டு வரும் 19 தொழிலாளர்களை தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் உறுப்பினராக சேர்க்கப்பட்டு வாரிய அடையாள அட்டைகள் மதுரை தொழிலாளர் இணை ஆணையர் அவர்களால் கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் தொழிலாளர் அலுவலர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் மதுரை தொழிலாளர் இணை ஆணையர், நாகர்கோவில், தொழிலாளர் உதவிஆணையர் (சமரசம்), தோட்ட நிறுவன ஆய்வாளர், தொழிலாளர் துணை ஆய்வாளர்கள், தொழிலாளர் உதவி ஆய்வாளர்கள், முத்திரை ஆய்வாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உடன் இருந்தனர்.

கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த தொழிலாளர்களும் உரிய படிவத்தில் ஆவணங்களுடன் தாக்கல் செய்து தங்களையும் வாரிய உறுப்பினர்களாக்கி கொண்டால் நலவாரிய உதவிகளான திருமணம், மகப்பேறு, கண்கண்ணாடி, கல்வி, இயற்கை மரணம்,விபத்து மரணம், விபத்து ஊனம் மற்றும் 60 வயது பூர்த்தியடைந்து மாத ஓய்வூதியமும் பெற்றுக் கொள்ளலாம் என்ற செய்தியினை கன்னியாகுமரி (இ) நாகர்கோவில் தொழிலாளர் அலுவலர் (சமூகபாதுகாப்புத் திட்டம்) திரு.சு.சுடலைராஜ் அவர்கள் தெரிவித்தார்கள்.

(சு.சுடலைராஜ்)
தொழிலாளர் அலுவலர்,
(சமூகப் பாதுகாப்புத் திட்டம்),
கன்னியாகுமரி (இ) நாகர்கோவில்

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.